

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 22.02.2024 | 08. நம்மில் தேவனுடைய திட்டம் நிறைவேறும் இரகசியம்! |
|---|---|




திரளான கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியத்தின் பல விஷயத்தில் இளைப்பாறுதலை இழந்து வாழுகிறார்கள். தேவன் நம்மில் விரும்புவதெல்லாம் நம்முடைய சொந்த கிரியைகளிலிருந்து நாம் ஓய்ந்திருக்க வேண்டும்! அதுபோலவே.... நம்முடைய சொந்த திட்டங்கள், மனுஷீக முயற்சிகள், சுயமான தீர்மானங்கள் ஆகிய 'இளைப்பாறுதலற்ற இவை அனைத்தும்' நமக்குள் கிரியை செய்ய விரும்பும் தேவனுடைய வல்லமையை வெகுவாய் பாதித்து விடுகிறது! தேவனோ நம் முழுமையையும் தம்மைக் கொண்டே நிரப்ப விரும்புகிறார். இதிலிருந்து தோன்றும் இனிமையான விளைவுதான் 'நாம்' வெளியேற்றப்படுகிறோம்!

இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில்தான் தேவனுடைய திட்டம்! தேவனுடைய வாசஸ்தலம்! தேவனுடைய ஞானம்! நம்மை முழுவதுமாய் ஆக்கிரமிக்கிறது.

– ரத்னம்